**செய்தி வெளியீடு எண்: 601** **நாள்: 07.04.2024**

**செய்தி வெளியீடு**

2024 ஆம் ஆண்டு மக்களவை பொதுத் தேர்தல் தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக்கிணங்க பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகின்றது. இதன் ஒரு பகுதியாக தேர்தல் நடைமுறையில் குடும்ப உறுப்பினர்களின் பங்கேற்பினை அதிகப்படுத்தும் விதமாக வினாடிவினா நிகழ்ச்சியானது 14.04.2024 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டிடத்தில் அமைந்துள்ள அம்மா மாளிகையில் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு அணியிலும் இரண்டு முதல் மூன்று நபர்கள் (குறைந்தது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருநபர்கள்) பங்கேற்கலாம். முதல்நிலைப் போட்டியானது இணைய வழியில் நடைபெறவுள்ளதால் பங்கேற்பாளர்கள் அனைவரும் கைபேசி மூலமே பங்கேற்க இயலும்.

இப்போட்டியானது காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை நடைபெறும். போட்டியில் பங்கேற்கும் ஆர்வமுடையோர் தங்களது பெயர், முகவரி மற்றும் கைபேசி எண்ணை goalquiz@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் பதிவு செய்து கொள்ளலாம். இப்போட்டியில் பங்கேற்க இணையவழி மூலம் பதிவு செய்வது மிகவும் அவசியம். நேரடியாக பதிவு செய்வதற்கு அனுமதி இல்லை.

தேர்தல்/ தேர்தல் நடைமுறை மற்றும் பொது அறிவு (முறையே 50%) சார்ந்து வினாடி வினா போட்டிகள் நடைபெறும்.

போட்டி குறித்த விவரம் பின் வருமாறு:-

| | | |
|---|---|---|
| போட்டி நடைபெறும் இடம் | – | அம்மா மாளிகை,<br>ரிப்பன் கட்டிடம்,<br>பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை. |
| நாள் மற்றும் நேரம் | – | 14.04.2024– காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை |
| நுழைவு கட்டணம் | – | அனுமதி இலவசம் |
| வருகைப் பதிவு நேரம் | – | காலை 9.30 மணி |
| பரிசுத் தொகை | – | முதல் பரிசு – ரூபாய். 20,000/-<br>இரண்டாம் பரிசு – ரூபாய். 10,000/-<br>மூன்றாம் பரிசு – ரூபாய். 5,000/- |

இப்போட்டி குறித்து எழும் ஐயங்களுக்கு 9840927442 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.

தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in